# **RECORD OF DEPOSITION OF WITNESS**

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | |
|---|---|---|---|
| **Case No.** | O.S.No. 82 of 2022 | **DW2** | : Cross |
| **Name** | ராஜகிருஷ்ணன் | **Father Name** | : சின்னசாமி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 12.03.2026 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் – 12.25 PM**

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை:**

1. வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும் நிலம் அதிகம் கொடுத்துவிட்டதாக கூறி தாக்கல் செய்துள்ளார். யார் யாருக்கு அதிகமாக கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் நான் சரவணனுக்கு அதிகமாக கொடுத்ததாக கூறியுள்ளார் என்னுடைய ஆவணத்தில் உள்ளபடி தான் நான் கொடுத்துள்ளேன். என் பெயரில் உள்ளதாக கூறுவது என்ன ஆவணம் என்றால் கிராம நத்த பட்டா கொடுத்துள்ளனர். அதை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. எனது பெயரில் பட்டா எதுவும் இல்லை வாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவைதான் நான் திருத்தம் செய்து சரவணனுக்கு விற்பனை செய்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் நடுப்பட்டி கிராமத்தில் உள்ளேன். வாதி எந்த ஊர் என்றால் சின்னகவுண்டனூர். நடுப்பட்டி மற்றும் சின்னகவுண்டனூர் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ஒரு கிலோ மீட்டர் இருக்கும்.

2. வாதியை எனக்கு சிறு வயது முதல் தெரியும் என்றால் அவர் எனது பெரியப்பா மகன். அவர் என்னுடைய பெரியப்பா மகன் என்று என்னுடைய பதில் உரையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வாதி தற்போது வீடு கட்டி குடியிருந்து வரும் இடத்தில் சுமார் 50 ஆண்டுகளாக உள்ளார் என்று சொன்னால் சுமார் 40 முதல் 50 ஆண்டு இருக்கும். 1, 2 பிரதிவாதிகள் வாதியின் வீட்டிற்கு எந்த திசையில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் வடக்கு திசையில். 1, 2 பிரதிவாதிகளில் யாருக்கு நான் கிரயம் கொடுத்தேன் என்றால் 1–ம் பிரதிவாதி சரவணனுக்கு தான் கொடுத்தேன். அவ்வாறு நான் கிரயம் கொடுத்த நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் பழைய சர்வே எண் 38/3 புதிய சர்வே எண் 84/ 7.

3. என்னுடைய பதில் உரையில் நான் பழைய சர்வே எண் மற்றும் புதிய சர்வே எண் ஆகியவற்றை குறிப்பிட்டு கூறி கிரயம் கொடுத்ததாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் தாவாசொத்திற்கு கிழக்கே சர்வே எண் 84/7 உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். தாவாசொத்திற்கு வாதி சின்னசாமி பெயரில் பட்டா கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த பட்டாவை அனுசரித்து வாதி பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி பெயரில் தாவாசொத்திற்கு பட்டா கொடுத்த விவரம் எனக்கு தெரியும் அவர் பெயரில் அடங்கல் பதிவு செய்யப்படவில்லை என்பதை தெரிந்து கொண்டு தாவா சொத்து பொறுத்து என் பெயரில்

மோசடியாக அடங்கல் பெற்று 1–ம் பிரதிவாதி பெயரில் நான் கிரைய ஆவணம் ஏற்படுத்தி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. 1, 2 பிரதிவாதிகள் எனக்கு உறவினரா என்றால் இல்லை. தாவாசொத்தை அளவீடு செய்து தான் விற்பனை செய்தோமா என்றால் ஆமாம். அவ்வாறு அளவீடு செய்து தான் கிரயம் கொடுத்தேன் என்ற விவரத்தை எனது பதில் உரையிலோ எனது வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொத்தை அளவீடு செய்யவே இல்லை வாதியை மோசடி செய்ய வேண்டும் என்று அளவீடு செய்யாமலேயே கிரையம் ஏற்படுத்தியுள்ளோம் அளவீடு செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. என்னுடைய வாக்குமூலத்தில் நான் கிரயம் கொடுத்த சொத்துக்கு வடக்கு புறம் சர்வே எண் 84/2 மற்றும் சர்வே எண் 84/4 உள்ளதாக சொல்லி உள்ளேன் அது யார் பேரில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் கிழக்கே சர்வே எண் 84/7 மேற்கே சர்வே எண் 38/1 தெற்கே சர்வே எண் 38/5 உள்ளதாக சொல்லியுள்ளேன் அது யார் பெயரில் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரயம் கொடுத்த நிலத்தை ஒட்டினார் போல் சர்வே எண் 38/3 மற்றும் சர்வே எண் 38/1 இல்லை என்று கூறியுள்ளேன். அவ்வாறான நிலையில் நான் கிரயம் கொடுத்த நிலத்தை ஒட்டினார் போல் வேறு என்னென்ன சர்வே எண்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது 10 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

6. வாதிக்கு பட்டா மட்டும் கொடுத்து அடங்கல் பதிவு செய்யாமல் உள்ளது போல் அந்த ஊரில் வேறு யாருக்காவது உள்ளதா என்றால் அது

குறித்து எனக்கு தெரியாது. வாதிக்கு பட்டா கொடுத்த விவரம் எனக்கு தெரியும் அவர் வெளியூர் வேலைக்கு சென்றுவிட்ட நேரத்தில் என் பெயரில் மோசடியாக வருவாய் ஆவணங்கள் ஏற்படுத்தி நான் 1–ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல அது பொய். தற்போதும் வாதி தாவாசொத்தான ஓட்டு வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் அந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும் அங்கு தான் உள்ளார்.

7. நான் ஒரு மோசடியான ஆவணத்தை 1–ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தி அது தொடர்பாக பொய்யான பதில்உரையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் விற்பனை செய்த சொத்தில் எனது அனுபவம் பாத்தியம் இல்லை அது தொடர்பாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை, இவ்வாறான நிலையில் நான் மோசடியாக ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி வருவாய் ஆவணங்களில் பட்டாபடி பெயர் பதிவு செய்ய எப்பொழுது மனு கொடுத்தாலும் என்னுடைய செல்வாக்கை கொண்டு அதை நான் தடுத்து வருகிறேன் தற்பொழுதும் தடுத்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பதிலுரையில் உண்மை சங்கதிகள் என்று கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல.

8. 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் கண்ட உண்மை சங்கதிகளைதான் நானும் தாக்கல் செய்துள்ளேன் எனக்கென்று தனிப்பட்ட சங்கதிகள் எதுவும் கூறி பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் இருக்கும் உண்மையை சொல்லி தான் நான் பதில் உரை தாக்கல் செய்துள்ளேன். 1, 2 பிரதிவாதிகள் மற்றும் நானும் சேர்ந்து

வாதியின் சொத்தை செய்ய வேண்டும் என்று பாத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டு அதன் அடிப்படையில் பதில் தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியில்லை. வாதி அவரது வீட்டில் குடியிருந்து வருவதற்கு 1, 2 பிரதிவாதிகள் அடிக்கடி இடையூறு செய்து வருகிறார்கள், அதற்கு முழு காரணம் நான் தான் என்று சொன்னால் சரியல்ல. என் பெயரில் பட்டா மற்றும் எந்தவித மூல ஆவணங்களும் இல்லாமல் மோசடியாக நான் ஏற்படுத்தி உள்ள ஆவணம் செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி கோரி உள்ளது போல தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வாதி வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளாரோ அந்த பரிகாரங்களை நீதிமன்றம் வழங்குவதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லையா என்றால் ஆட்சேபனை எதுவும் இல்லை.

**குறுக்குவிசாரணை முடிவுற்றது. மறுவிசாரணை இல்லை.**

**முடிவு நேரம் – 12.50 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- XXXXX

District Munsif(FAC),
Uthangarai.